கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. S. ராஜசிம்மவர்மன், பி.ஏ., பி.எல் ( Hons),
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056 தமிழ் விசுவாவசு ஆண்டு பங்குனி மாதம் 04 ம் நாள்
( முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.244/ 2025 )
( விழுப்புரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1)
( விழுப்புரம் மேற்கு காவல் நிலைய குற்ற எண். 176 / 2025 )

**அமர்வு வழக்கு எண் . 35/2026**

**(CNR NO. TNVP 01- 000498 - 2026 )**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்,<br>விழுப்புரம் மேற்கு காவல் நிலைய குற்ற எண். 176 / 2025 |
| 2. | குற்றம்சாட்டவர்கள் பெயர் , வயது, வேலை, தந்தை பெயர் மற்றும் முகவரி | | 1. முகமது அசாரூதீன் ( வயது 28)<br>த/பெ, ஐதர் அலி<br>அக்கிரகார நடுத்தெரு,<br>பூந்தோட்டம்,<br>விழுப்புரம்.<br>2. ராஜா வயது 23,<br>த/பெ. ரஜினி<br>பெருமாள் கோவில் தெரு,<br>பிடாகம், விழுப்புரம். |
| 3. | சம்பவ நாள் | : | 21.08.2025 |
| 4. | புகார் நாள் | | 22.08.2025 |

| | | | |
|---|---|---|---|
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1 வது எதிரி - 22.08.2025<br>2 வது எதிரி கைது செய்யப்படவில்லை |
| 6. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1 வது எதிரி - - 09.09.2025 |
| 7. | எதிரிகள் மீதான குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது பிரிவுகள் . 274, 275, 123 BNS r/w 24(1) , 6(b) COTPA Act ன் கீழ் . |
| 8. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | எதிரிகள் மீது பிரிவுகள் . 274, 275, 123 BNS r/w 24(1) , 6(b) COTPA Act ன் கீழ் . |
| 9. | எதிரிகளின் பதில் | | குற்றவாளிகள் அல்ல |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | - | 25.02.2026 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | | 17.03.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | | எதிரிகள் மீது பிரிவுகள். 274, 275, 123 BNS r/w 24(1) , 6(b) COTPA Act ன் கீழ் குற்றவாளிகள் அல்ல. |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும், | - | முடிவாக, 1.2 எதிரிகள் மீது பாரதிய நியாய சட்டம் பிரிவுகள் . 274, 275, 123 r/w 24(1), 6(b) |

| | | | |
|---|---|---|---|
| | | | COTPA Act ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு. 258(1) ன் ( BNSS) கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன்.இவ்வழக்கில் எதிரிகளுக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | | எதிரிகள் விடுதலை செய்யப்பட்டதால், தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | | இல்லை . |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 17.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர்

திரு.இரா.சுப்பராயலு அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். காளிதாஸ் அவர்களும், 2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. வீ. கருணாமூர்த்தி அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இருவரும் ஒன்று சேர்ந்து தங்களின் சுயலாபத்திற்காக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை போதை பொருட்களை பெங்களூரில் இருந்த வரவழைத்து அதை 2வது எதிரி விழுப்புரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் பங்க் கடைகளுக்கு விற்பனை செய்தும், 1வது எதிரி விழுப்புரம் எம். ஜி ரோட்டில் உள்ள SMHA Trades என்ற பெயர் கொண்ட அவரது மளிகை கடையில் வைத்தும் மேற்படி புகையிலை போதை பொருட்களை பயன்படுத்தினால் மனித உயிருக்கும், உடலுக்கும் தீங்கு நேரும் என்று தெரிந்தே விற்பனை செய்து வந்துள்ளனர். கடந்த 21.08.2025ம் தேதி பெங்களூரிலிருந்து 1, Hans என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 2415 Pieces 2 ) cool lip என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 376 pieces 3 ) VIMAL PAN MASALA என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் -1020 PIECES 4 0 V- 1 TOBACCO என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 1020 PIECES ஆகியவற்றை 1, 2 எதிரிகள் இருவரும் சட்டவிரோதமாக எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோயின்றி வரவழைத்து 2வது எதிரி SMHA TRADES என்ற பெயர் கெண்ட மளிகை கடையில் விற்பனைக்காக

வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். 22.08.2025 ம் தேதி 15.00 மணிக்கு எதிரியை கைது செய்தபோது சம்பவ இடத்திலிருந்து 1 வது எதிரியிடமிருந்து 1, Hans - 2415 Pieces 2 ) cool lip 376 pieces 3 ) VIMAL PAN MASALA - 1020 PIECES 4 ) V-1 TOBACCO - 1020 PIECES ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது. எனவே எதிரிகள் பிரிவு. 274, 275, 123 BNS r/w. 24(1) 6(b) COTPA Act ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக விழுப்புரம் மேற்கு காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையில், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, விழுப்புரம் அவர்கள் இந்த வழக்கை முதல் நிலை பதிவேடு வழக்கு எண் 244/2025 ஆக கோப்பிற்கு எடுத்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை 230 BNSS ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கி, பிரிவுகள் . 123, 274, 275 BNS r/w. 24(1) 6(b) COTPA Act ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடியது என்பதால், 232 BNSS பிரிவின் படி இவ்வழக்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. விழுப்புரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண். 35/2026 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்ற **D.No. 515/2026** நாள். **21.01.2026** தேதிய உத்தரவுபடி வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு 28.01.2026 அன்று இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளது.

3) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் ஆஜரானவுடன், கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இந்த அமர்வு வழக்கை 249 BNSS கீழ் திறப்பு செய்தார். இவ்வழக்கில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய அரசு தரப்பில் முக நோக்கு வழக்கு உள்ளது என முடிவு செய்து, எதிரிகள் மீது பிரிவுகள். 123, 274, 275 BNS r/w. 24(1) of COTPA Act படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவற்றின் சாராம்சத்தை எதிரிகளுக்கு தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் அவற்றை மறுத்து அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தெரிவித்ததால் இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவேண்டி அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 4 . வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சா.பொ.1 முதல் சா.பொ. 4 வரையிலானவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து 351 பிரிவின் கீழ் எதிரிகளிடம் விரிவாக விளக்கி வினவிய போது, எதிரிகள் சாட்சியத்தை பொய் என மறுத்தார்கள் . எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இருதரப்பும் கேட்கப்பட்டது.

**7) அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பின் விவரங்கள் பின்வருமாறு :-**

அ.சா.1 திரு . சுரேஷ் தனது சாட்சியத்தில், தான் தற்போது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், தலைமை காவலராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 22/08/2025 ம் தேதி அதே காவல் நிலையத்தில் அதே பொறுப்பில் இருந்தபோது, நான், உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் தலைமை காவலர் சக்திவேல், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது என்றும், அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன. அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை என்றும், மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது என்றும்,

மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது என்றும், அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில், உதவி ஆய்வாளர் அவர்கள் 15 - 10 மணிக்கு கைது செய்தார்கள் என்றும், 15 - 15 மணிக்கு அவரை விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தும், அதில் எதிரி, எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், . மேற்படி 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் அவர்கள் 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் தாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், . அந்த சான்று பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை என்றும், . 1 ம் எதிரி அசாருதீனை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்றும், சாட்சி சரியாக அடையாளம்

காண்பித்தார் என்றும், அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எங்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா .2 திரு. சக்திவேல் தனது சாட்சியத்தில், " தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் மதுவிலக்கு அமுல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றும், கடந்த 22/08/2025 ம் தேதி விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், தலைமை காவலராக பணியில் இருந்தபோது, நான், உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் தலைமை காவலர் சுரேஷ், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது என்றும், அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN

MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன என்றும், அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை என்றும், மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது என்றும், மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில், உதவி ஆய்வாளர் அவர்கள் 15 - 10 மணிக்கு கைது செய்தார்கள் என்றும், 15 - 15 மணிக்கு அவரை விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தும், அதில் எதிரி, எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், மேற்படி 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் அவர்கள் 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்டுள்ளது என்றும், அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை என்றும், 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்றும், சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 173 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் தங்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்,

அ.சா. 3 திரு.. நவநீத கிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 22/08/2025 ம் தேதி விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், நான் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நான், தலைமை காவலர்கள் சக்திவேல் மற்றும் சுரேஷ், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக தனக்கு ஒரு தகவல் கிடைத்தது என்றும், அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர்

அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால், அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன. அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை. மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது என்றும், மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது என்றும், அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் மேற்படி தலைமை காவலர்கள் முன்னிலையில், நான் 15 - 10 மணிக்கு கைது செய்தேன் என்றும், பிறகு அவரை 15 - 15 மணிக்கு விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை நான் பதிவு செய்து, அதில் எதிரி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் எதிரி அசாருதீன் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco -

1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை நான் மேற்படி சாட்சிகள் முன்னிலையில், 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அதிலும் மேற்படி சாட்சிகளான தலைமை காவலர்கள் இருவரிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 என்றும், அந்த சான்று பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை என்றும், 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்று, பின்பு தான் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், முதல் தகவல் அறிக்கையை முறையாக விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அதன் பிரதியை முறையாக உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பிறகு எதிரியை உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பிறகு வழக்கு சொத்துக்களை படிவம் - 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், அந்தப் படிவம் - 95 அ.சா.ஆ.4 என்றும், பிறகு மேற்சொன்ன சாட்சிகளை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 2ம் எதிரி ராஜா த/பெ.ரஜினி, நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார் என்றும், விசாரணை முடித்து எதிரிகள் 1) முகமது அசாருதீன், 2) ராஜா

த/பெ.ரஜினி (2 ம்எதிரி தலைமறைவு எதிரி ஆவார்) ஆகியோர்கள் மீது BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அனைத்து ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார் .

9) இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில், இந்நீதிமன்றம் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாக கருதுவது என்னவெனில்,

( 1) எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட பிரிவு . BNS பிரிவுகள் . 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

10) <u>பிரச்சனை எண். 1 -</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு சாட்சிகள், இரு தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன.

11) <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -</u>

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இருவரும் ஒன்று சேர்ந்து தங்களின் சுயலாபத்திற்காக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை போதை பொருட்களை பெங்களூரில்

இருந்த வரவழைத்து அதை 2 வது எதிரி விழுப்புரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் பங்க் கடைகளுக்கு விற்பனை செய்தும், 1 வது எதிரி விழுப்புரம் எம். ஜி ரோட்டில் உள்ள SMHA Trades என்ற பெயர் கொண்ட அவரது மளிகை கடையில் வைத்தும் மேற்படி புகையிலை போதை பொருட்களை பயன்படுத்தினால் மனித உயிருக்கும், உடலுக்கும் தீங்கு நேரும் என்று தெரிந்தே விற்பனை செய்து வந்துள்ளனர் என்றும், கடந்த 21.08.2025 ம் தேதி பெங்களூரிலிருந்து 1, Hans என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 2415 Pieces 2 ) cool lip என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 376 pieces 3 ) VIMAL PAN MASALA என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் -1020 PIECES 4 0 V- 1 TOBACCO என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 1020 PIECES ஆகியவற்றை 1, 2 எதிரிகள் இருவரும் சட்டவிரோதமாக எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோயின்றி வரவழைத்து 2 வது எதிரி SMHA TRADES என்ற பெயர் கெண்ட மளிகை கடையில் விற்பனைக்காக வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும், 22.08.2025 ம் தேதி 15.00 மணிக்கு எதிரியை கைது செய்தபோது சம்பவ இடத்திலிருந்து 1 வது எதிரியிடமிருந்து 1, Hans - 2415 Pieces 2 ) cool lip 376 pieces 3 ) VIMAL PAN MASALA -1020 PIECES 4 ) V- 1 TOBACCO - 1020 PIECES ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகள் பிரிவு. 274, 275, 123 BNS r/w. 24(1) 6(b) COTPA Act ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளார் என்றும்,

இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 திரு. சுரேஷ் ( தலைமை காவலர்) , அ.சா.2. திரு. சந்திரசேகர் ( தலைமை காவலர்) , அ.சா.3 திரு. நவநீதகிருஷ்ணன் ( உதவி ஆய்வாளர் ) புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் 1ம் எதிரியிடமிருந்து புகையிலை பொருட்கள் மற்றும் மது மயக்க பொருட்கள் கைப்பற்றியது குறித்தும் , முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும்,1ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் 2ம் எதிரியை கைது செய்தது குறித்தும் , சான்றாவணங்கள் தயார் செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், மேற்படி சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக ,1, 2 எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களுக்காக தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**12) <u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -</u>**

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் , இந்த வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றும், இந்த வழக்கில் தனி நபர்கள் யாருமே சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், . கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக தனி நபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் அனைவருமே அரசு அலுவலர்கள் மற்றும் காவல் துறையை சார்ந்தவர்கள். எனவே முறையாக சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான

சாட்சிகள் குறுக்கு விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது . அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், வழக்கின் சான்றாவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2ம் எதிரி வழக்கில் தானாக இணைக்கப்பட்டுள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2ம் எதிரிக்கு எதிராக எந்த ஆதரவும் இல்லை என்றும், , எனவே எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பு சாட்சிகள் ஏற்புக்குரியதாக இல்லை என்றும், எனவே எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13) கண்ணுற்ற மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளின் சாட்சியம் -**

இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இந்த வழக்கை கவனத்துடன் பரிசீலித்து பார்க்கும்போது இந்த வழக்கில் அ.சா.1 ஆக தலைமை காவலர் திரு சுரேஷ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில், " **தான் தற்போது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், தலைமை காவலராக பணி செய்து வருகிறேன் என்றும்,** கடந்த 22/08/2025 **ம் தேதி அதே காவல் நிலையத்தில் அதே பொறுப்பில் இருந்தபோது, நான், உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் தலைமை காவலர் சக்திவேல், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக உதவி ஆய்வாளர்**

திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது என்றும், அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன. அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை என்றும், மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது என்றும், மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது என்றும், அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில், உதவி ஆய்வாளர் அவர்கள் 15 - 10 மணிக்கு கைது செய்தார்கள் என்றும், 15 - 15 மணிக்கு அவரை விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தும், அதில் எதிரி, எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின்

அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், . மேற்படி 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் அவர்கள் 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் தாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், . அந்த சான்று பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை என்றும், . 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்றும், சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எங்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** இந்த வழக்கில் அ.சா.2 ஆக தலைமை காவலர் திரு. சக்திவேல் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் " தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் மதுவிலக்கு அமுல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றும், கடந்த 22/08/2025ம் தேதி விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், தலைமை காவலராக

பணியில் இருந்தபோது, நான், உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் தலைமை காவலர் சுரேஷ், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக உதவி ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது என்றும், அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன என்றும், அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை என்றும், மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது என்றும், மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில், உதவி ஆய்வாளர் அவர்கள் 15 - 10 மணிக்கு கைது செய்தார்கள் என்றும், 15 - 15 மணிக்கு அவரை விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தும், அதில் எதிரி, எங்களிடம்

கையொப்பம் பெற்றார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், மேற்படி 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் அவர்கள் 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை என்றும், 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்றும், சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 173 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் தங்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் ”

சாட்சியம் அளித்துள்ளார்.

**15**) இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள இருவருமே காவல்துறை அதிகாரிகள் ஆவார்கள். இந்த வழக்கில் அ.சா. 3 புலன் விசாரணை அதிகாரியாலேயே புகார் பதிவு செய்யப்பட்டு அவராலேயே புலன் விசாரணை செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்கள் மனசாய்வு கொண்டது என்று எதிரிகள் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வாதத்தின் அடிப்படையில் அ.சா.1, அ.சா.2 இருவரின் சாட்சியம் நம்பக தன்மை வாய்ந்ததா? என்பதை கண்டறிய வேண்டியது அவசியம் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

16) இந்த வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சுரேஷ் தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில், இந்த சம்பவம் தொடர்பாக எங்களது உதவி ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் வந்ததா? அல்லது நேரில் யார் மூலமாவது தகவல் வந்ததா? என்றால், நேரடியாக தான் தகவல் வந்தது. எனது விசாரணையில் ரகசிய தகவல் நேரில் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் பாக்கெட் டைரியை பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். எம்.ஜி ரோடு எப்போதும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கு கடைகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் எங்களைப் பார்த்து ஓட ஆரம்பித்தவுடன் அவர்களை யார் மடக்கிப்பிடித்தது என்றால், உதவி ஆய்வாளரும், நாங்களும் மடக்கி பிடித்தோம். உதவி ஆய்வாளர் விசாரணையில் நான் எதிரிகளை நாங்களும், உதவி ஆய்வாளரும் மடக்கி பிடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலும் சிசிடிவி கேமரா உள்ளது என்றும், அக்கம் பக்கத்திலும் சிசிடிவி கேமராக்கள் உள்ளது

என்றும் சொன்னால், அதை நாங்கள் கவனிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டதா? அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா? என்றால், கையால் எழுதி விட்டு பிறகு காவல்நிலையத்தில் தட்டச்சு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சௌந்தர்ராஜன் என்பவர் தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதேபோல் இந்த சம்பவம் தொடர்பாக உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

17) மேலும் அ.சா.1 யை 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது 1ம் எதிரியை கைது செய்ததற்குப் பிறகு, அவரை அழைத்துக்கொண்டு நானும், என்னுடன் இருந்த மற்றொரு காவலரும், உதவி ஆய்வாளரும், 2-ம் எதிரியின் இருப்பிடத்திற்கோ, அல்லது சம்பவ இடத்திற்கோ, செல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் 2ம் எதிரியின் பெயரை நாங்கள் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

18) இந்த வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சக்திவேல் என்பவர் தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சௌந்தர்ராஜன் என்பவர் தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதேபோல் இந்த சம்பவம் தொடர்பாக உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். என்றும், எம்.ஜி ரோடு எப்போதும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கு கடைகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் எங்களைப் பார்த்து ஓட ஆரம்பித்தவுடன்

அவர்களை யார் மடக்கிப்பிடித்தது என்றால், உதவி ஆய்வாளரும், நாங்களும் மடக்கி பிடித்தோம். உதவி ஆய்வாளர் விசாரணையில் நான் எதிரிகளை நாங்களும், உதவி ஆய்வாளரும் மடக்கி பிடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், ஒப்புக் கொண்டுள்ளார். 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் " அவர் 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் 2ம் எதிரியின் பெயரை நாங்கள் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான் என்றும் " ஒப்புக் கொண்டுள்ளார்.

19) எனவே, அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தை கவனத்துடன் பரிசீலனைசெய்து பார்க்கும் போது சம்பவ இடம் பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பது தெளிவாக தெரியவருகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக தனி நபர் யாரும் 1ம் எதிரியிடமிருந்து புகையிலை மதிமயக்க பொருட்களை வாங்கினார்கள் என்றும், தனி நபர் பாதிக்கப்பட்டதாகவோ, தனி புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனவே இந்த சங்கதி எதிரிக்கு எதிராக ஒரு எதிர்மறை யூகத்தையே ஏற்படுத்துகிறது.

20) மேலும் 1ம் எதிரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் 1ம் எதிரிக்கு பதிலாக சௌந்தர்ராஜன் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2ம் எதிரி வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2ம் எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் முக்கிய சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்ற 2ம் எதிரி தரப்பு வாதம் ஏற்புக்குரியதாக உள்ளது.

21) இந்த வழக்கில் அரசு தரப்பில் வேறு தனிப்பட்ட சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவருமே காவல்துறையை சேர்ந்தவர்கள். இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு எதிரிக்கு எதிராக ஒரு எதிர் மறை யூகத்தையே ஏற்படுத்துகிறது. இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் அனைவரும் காவல்துறை சாட்சிகள் என்ற நிலையில், மேற்படி அ,சா.1 , அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் முரண்பாடுகள் உள்ள நிலையிலும் , தனிப்பட்ட சாட்சிகளை முன்னிலைப்படுத்தப்படாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. எனவே மேற்படி கண்ணுற்ற மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளின் மூலம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>22) புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா?</u>**

(i) இந்த வழக்கில் அ.சா. 3 ஆக புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு . நவநீதகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில்,

> " தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 22/08/2025 ம் தேதி விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், நான் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நான், தலைமை காவலர்கள்

சக்திவேல் மற்றும் சுரேஷ், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக தனக்கு ஒரு தகவல் கிடைத்தது என்றும், அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால், அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன. அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை. மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது என்றும், மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது என்றும், அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் மேற்படி தலைமை காவலர்கள் முன்னிலையில், நான் 15 - 10 மணிக்கு கைது செய்தேன் என்றும், பிறகு அவரை 15 - 15 மணிக்கு விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்

கொண்டார் என்றும், அதை நான் பதிவு செய்து, அதில் எதிரி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் எதிரி அசாருதீன் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1- Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை நான் மேற்படி சாட்சிகள் முன்னிலையில், 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அதிலும் மேற்படி சாட்சிகளான தலைமை காவலர்கள் இருவரிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 என்றும், அந்த சான்று பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை என்றும், 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்று, பின்பு தான் எதிரியை பாரா

காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், முதல் தகவல் அறிக்கையை முறையாக விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அதன் பிரதியை முறையாக உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பிறகு எதிரியை உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பிறகு வழக்கு சொத்துக்களை படிவம் - 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், அந்தப் படிவம் - 95 அ.சா.ஆ.4 என்றும், பிறகு மேற்சொன்ன சாட்சிகளை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 2ம் எதிரி ராஜா த/பெ.ரஜினி, நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார் என்றும், விசாரணை முடித்து எதிரிகள் 1) முகமது அசாருதீன், 2) ராஜா த/பெ.ரஜினி (2ம்எதிரி தலைமறைவு எதிரி ஆவார்) ஆகியோர்கள் மீது BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அனைத்து ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், "

சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) மேற்படி அ.சா. 3 தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில்,

“ சம்பவம் நடந்ததாக கூறப்படும் பகுதியில் மக்கள் நடமாட்டம் நிறைய

உள்ளது என்றும், இருபுறமும் நிறைய கடைகள் உள்ளது என்றும் சொன்னால், சரிதான். நான் இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையாவது விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அப்படி யாரும் முன் வராத பட்சத்தில் அந்த பகுதியை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரை சாட்சியம் அளிக்க கூப்பிட்டேனா? என்றால், இல்லை. நான் கடை 1ம் எதிரியுடையது தான் என்பதை காண்பிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் நிறைய சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான் என்றும்" ஒப்புக்கொண்டுள்ளார். .

மேலும், கைப்பற்றப்பட்ட பொருட்கள் விஷத்தன்மை உடையவை என்பதை காண்பிக்க தடயவியல் துறைக்கு அனுப்பி அறிக்கை எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ஏற்கனவே வியாபாரம் செய்தது சம்பந்தமாக அவர் மீது புகார் எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான் என்றும் " ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.3 ன் குறுக்கு விசாரணை சாட்சியம் முதல் விசாரணை சாட்சியத்தை முற்றிலும் பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இந்த வழக்கில் மேற்படி அ.சா. 3 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தில் இருந்து 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்படாதது ஏன் என்பதற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி. என்பதை ஒப்புக்கொண்டுள்ளதால் பொது மக்கள் யாரையும் சாட்சிகளாக விசாரிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே

அமைந்துள்ளது. மேலும் கிராம நிர்வாக அலுவலர் , கிராம அதிகாரி ஆகியோரை சாட்சிகளாக விசாரிக்காதது ஏன் என்பதற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும் சம்பவ இடம் குறித்து காண்பிப்பதற்கு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புகார்தாரர் அ.சா. 3 புலன் விசாரணை அதிகாரியாக இருந்துள்ளார். புகார்தாரரே புலன் விசாரணை அதிகாரியாக இருக்கலாம் என்பதில் இந்த நீதிமன்றத்திற்கு மாற்று கருத்து இல்லை. எனவே இது போன்ற அசாதாரண தருணங்களில் மற்ற சாட்சிகளின் சாட்சியங்கள் இதர வழக்கு சூழ்நிலையினை வைத்து அ.சா.3 ன் சாட்சியத்தை குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

(iii) அதன் அடிப்படையில் புலன் விசாரணை அதிகாரி அ.சா. 3 ன் சாட்சியமானது மற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா? என்று பார்க்கும்போது அ.சா.1. அ.சா. 2 இருவருமே தங்களது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் " இந்த வழக்கில் அந்நிய சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், மேலும் சம்பவம் குறித்து தனிநபர்களை அழைத்தும் அவர்கள் வரவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர் . மேலும் இந்த வழக்கு சம்பந்தமாக தனி நபர் யாரும் ஆஜராகி எதிரியின் மீது புகார் கொடுத்தார்களா? என்றால் தனிநபர்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான் என்றும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேற்படி அ.சா. 1, அ.சா.2 இருவருமே தங்களது

குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி அ.சா. 3 புகார்தாரர் , புலன் விசாரணை அதிகாரி என்ற நிலையில் அ.சா. 1, அ.சா.2 ஆகியோர் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவர்கள் இருவரின் சாட்சியமும் நம்பக தன்மை இல்லாதவை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.1 , அ.சா.2 ஆகியோர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமும் இந்த வழக்கிற்கு வலு சேர்ப்பதாக அமையவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையானதா? என்று இந்த நீதிமன்றத்திற்கு ஐயமே ஏற்படுகிறது.

(iv) இந்த வழக்கில் புலன் விசாரணை செய்தது குறித்தும், ஒப்புதல் வாக்குமூலம் மூலம் சான்று பொருள் கைப்பற்றப்பட்டது குறித்தும் சந்தேகமே எழுகிறது. அந்த சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு ஆதரவாகவே வழங்க இயலும். மேலும், இது போன்ற வழக்குகளில் தனிப்பட்ட சாட்சிகள் இல்லாமல் தண்டனை வழங்கும்போது அந்த வழக்கின் நம்பக தன்மைக்கு கேடு விளைவித்து விடக்கூடும் என்று எதிரிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது.

**23)** **எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில்**,இவ்வழக்கின் 1,2 எதிரிகள் இருவரும் ஒன்று சேர்ந்து தங்களின் சுயலாபத்திற்காக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை போதை பொருட்களை பெங்களூரில் இருந்த வரவழைத்து அதை 2 வது எதிரி விழுப்புரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் பங்க் கடைகளுக்கு விற்பனை செய்தும், 1 வது எதிரி விழுப்புரம் எம். ஜி ரோட்டில் உள்ள SMHA Trades என்ற பெயர் கொண்ட அவரது மளிகை கடையில் வைத்தும் மேற்படி புகையிலை போதை பொருட்களை பயன்படுத்தினால் மனித உயிருக்கும், உடலுக்கும் தீங்கு நேரும் என்று தெரிந்தே விற்பனை செய்து வந்துள்ளனர் என்றும், கடந்த 21.08.2025 ம் தேதி பெங்களூரிலிருந்து 1, Hans என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 2415 Pieces 2 ) cool lip என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 376 pieces 3 ) VIMAL PAN MASALA என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் -1020 PIECES 4 0 V- 1 TOBACCO என்ற பெயர் கெண்ட புகையிலை போதை பொருட்கள் - 1020 PIECES ஆகியவற்றை 1, 2 எதிரிகள் இருவரும் சட்டவிரோதமாக எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோயின்றி வரவழைத்து 2 வது எதிரி SMHA TRADES என்ற பெயர் கெண்ட மளிகை கடையில் விற்பனைக்காக வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். 22.08.2025 ம் தேதி 15.00 மணிக்கு எதிரியை கைது செய்தபோது சம்பவ இடத்திலிருந்து 1 வது எதிரியிடமிருந்து 1, Hans - 2415 Pieces 2 ) cool lip 376 pieces 3 ) VIMAL PAN MASALA -1020 PIECES 4 ) V- 1 TOBACCO -

1020 PIECES ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளின் செய்கையானது பிரிவு. 274, 275, 123 BNS r/w. 24(1) 6(b) COTPA Act ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரிகள் மீது BNS பிரிவுகள். 274, 275, 123 r/w 24(1) , 6(b) COTPA Act ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, 1, 2 எதிரிகள் மீது பாரதிய நியாய சட்டம் பிரிவுகள் . 274, 275, 123 r/w 24(1) , 6(b) COTPA Act ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு. 258(1) ன் ( BNSS) கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிகளுக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவைகள் சான்று பொருட்கள் பயனற்றவை என்பதால் அவற்றை மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

RAJASIMMAVARMAN S

Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.30 10:31:31 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள் -</u>**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு . சுரேஷ் (தலைமை காவலர்) |
| 2 | அ.சா.2 | திரு .சக்திவேல் (தலைமை காவலர்) |
| 3 | அ.சா.3 | திரு. நவநீதகிருஷ்ணன் ( உதவி ஆய்வாளர் ) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் -**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 22.08.2025 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 2 | அ.சா.ஆ.2 | 22.08.2025 | கைப்பற்றுதல் மகசர் |
| 3 | அ.சா.ஆ.3 | 22.08.2025 | முதல் தகவல் அறிக்கை |
| 4 | அ.சா.ஆ.4 | 22.08.2025 | படிவம். 95 |

**அரசு தரப்பு சான்று பொருள் . சி.பி. 94/2025**

-

சா.பொ.1 ... Hans - 2415 Pieces

சா.பொ.2 ... cool lip - 376 pieces

சா.பொ. 3 ... VIMAL PAN MASALA -1020 PIECES

சா.பொ. 4 .... V-1 TOBACCO -1020 PIECES

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்** - இல்லை.

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** - - இல்லை.

<table>
<tr><th colspan="5"><u>Case Summary</u></th></tr>
<tr><th>SL.No.</th><th>Description</th><th colspan="3">Details</th></tr>
<tr><td>1</td><td>எதிரிகள் அடைப்பு காவலில் இருந்த காலம் .</td><td colspan="3">1 வது எதிரி - 22.08.2025 முதல் 09.09.2025 வரை<br>2 வது எதிரி - கைது செய்யப்படவில்லை,</td></tr>
<tr><td>2</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள்</td><td colspan="3">16.10.2025</td></tr>
<tr><td>3</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள்</td><td colspan="3">21.01.2026</td></tr>
<tr><td>4</td><td>எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள்</td><td colspan="3">25.02.2026</td></tr>
<tr><td>5</td><td>வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழான மனு நீங்கலாக )</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td rowspan="4">.</td><td rowspan="4">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சி</td><td>மு.வி</td><td>கு.வி</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 7 | எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் வினவப்பட்ட நாள். | 17.03.2026 |
| 8 | எதிரிகள் தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான / ஆஜர்படுத்தப்பட்ட காலம். | NIL |
| 9 | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும். | இல்லை |

RAJASIMMAVARMAN S

Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.30 10:31:42 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,

(விரைவு நீதிமன்றம்),

விழுப்புரம்.

**அசல் / நகல் தீர்ப்பு**

**அமர்வு வழக்கு எண். 35/2026**

**நாள். 18.03.2026.**